வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 17.03.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 70 பக்கங்கள் : 08

## பொதுப் போக்குவரத்து முடங்கும் அபாயநிலை!

**போக்குவரத்து தொழிற்சங்க மத்திய நிலையம் எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 17

நாட்டின் பொதுப் போக்குவரத்துச் சேவை எதிர்வரும் புதன்கிழமைக்குள் முழுமையாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஒருங்கிணைந்த போக்குவரத்து தொழிற்சங்க மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் தலைவர் சம்பத் ரணசிங்க இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலைத் தொடர்ந்து நாட்டில் எரிபொருள் வரிசைகள் உருவான போதே, கிவ்-ஆர் முறையை விரைவாகச் செயல்படுத்துமாறு அரசாங்கத்திற்கு நாங்கள் ஆலோசனை வழங்கினோம். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இந்த முன்னெச்சரிக்கை வழங்கப்பட்ட போதிலும், அரசாங்கம் அதனைச் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. தற்போது நடைமுறையில் உள்ள வாரத்திற்கு 60 லீற்றர் டீசல் வழங்கும் முறை முற்றிலும் போதுமானதாக

07

**இடர்கால நிலைமையை எதிர்கொள்ளும் பொருட்டு**

# நாளை முதல் அரச அலுவலகங்களுக்கு புதன்கிழமைகளில் விசேட விடுமுறை!

கொழும்பு, மார்ச் 17

மத்திய கிழக்கில் எழுந்துள்ள போர்ச் சூழல் காரணமாக இலங்கை எதிர்நோக்கியுள்ள இடர் கால நிலைமையை எதிர்கொள்ளத்தக்க வகையில் அரச அலுவலகங்களை அனைத்தையும் புதன் கிழமைகளில் பூட்டி, விசேட விடுமுறையாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த அறிவித்தல் நேற்று மாலை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டது.

இந்தப் பிரகடனத்தின் கீழ் நாளை புதன் கிழமை முதல் நாட்டிலுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நீதிச்சேவை அடங்கலாக அரச திணைக்களங்கள், அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் மற்றும் நீதி மன்றங்கள் உட்பட அத்தியாவசிய சேவையினுள் உள்ளடக்கப்படாத அரச நிறுவனங்கள் அனைத்திற்கும் மறு அறிவித்தல் வரை புதன்கிழமைகள் விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சுகாதார சேவைகள், நீர் வழங்கல் மற்றும் துறைமுக சேவைகள் உட்பட அத்தியாவசிய

07

## 'வீட்டிலிருந்து வேலை' இன்னும் முடிவில்லை

கொழும்பு, மார்ச் 17

அரசு ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை அமுல்படுத்துவது தொடர்பாக இதுவரை எந்தவொரு இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, அரச ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து தமது அன்றாடக்

07

## கொழும்பு வந்தடைந்த எரிபொருள் கப்பல்

கொழும்பு, மார்ச் 17

இலங்கைக்கு நேற்றுக் காலை ஒரு எரிபொருள் தாங்கிக் கப்பல் வந்துள்ளதாகவும், அதலிருந்து எரிபொருளை இறக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் 18,000 மெற்றிக் தொன் டீசல், 17,000 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 3,000 மெற்றிக் தொன் சூப்பர் டீசல் எடுத்து வரப்பட்டுள்ளது.

தற்போது கொள்முதல் கட்டளை செய்யப்பட்ட அனைத்து கப்பல்களும் திட்டமிட்டபடி வந்து சேர்வ தாகவும், நாடு முழுவதும் உள்ள நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கட்டளைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## கொழும்புத்துறையில் விபத்து; அண்ணனும் தங்கையும் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

கொழும்புத்துறையை அண்டிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற குறித்த விபத்தில் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த பிரட்லீ (வயது 24) அவரது சகோதரியான டிலக்ஸி (வயது 19) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சகோதரர்களான இருவரும் மோட்டார் சைக்கிளில்

07

## 7 ஏக்கர் காணி விடுத்தது இராணுவம்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான 7 ஏக்கர் காணி, இராணுவத்தினர் வசமிருந்து விடுவிக்கப்பட்டு, மாவட்ட பிரதி மாகாண

07

## வைத்தியர்களுக்கு இனி தடையின்றி எரிபொருள்!

**சுகாதார பிரதி அமைச்சர் அறிவிப்பு**

கொழும்பு, மார்ச் 17

வைத்தியர்களின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் எரிபொருளை விநியோகிக்க எதிர்பார்ப்பதாக சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சேவைத் தேவையின் அடிப்படையில் வழங்கப்படும் எரிபொருள் அளவைக் குறிப்பிடும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட நடவடிக்கை

07

## பஸ்களுக்கு டீசல் ஒதுக்கீடு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 17

பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு அவை பயணிக்கும் தூரத்தின் அடிப்படையில் வாரத்திற்கு 60 லீற்றர் முதல் 360 லீற்றர் வரையிலான எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்

07

## நீதிமன்ற நடவடிக்கைகளிலும் மாற்றம்!

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு, நீதிமன்ற நடவடிக்கைகளை முடிந்தவரை இணைய வழி தளங்கள் ஊடாக முன்னெடுக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழு நீதவான்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இதற்காக விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் விளக்கமறியல் காலத்தை நீடிக்கும் போது, அவர்களை நேரடியாக நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதைத் தவிர்த்து, இணைய வழிக் காணொளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கமான சூழலில் அனைத்து வழக்குகளும் நீதிமன்றில் நேரடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனினும், தற்போதைய அசாதாரண சூழலில், எரிபொருள்

07

## ஜனாதிபதி-மனோ கணேசன் தொலைபேசியில் உரையாடல்

**அடுத்த வாரம் நேரில் சந்திப்பு**

கொழும்பு, மார்ச் 17

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஆகியோருக்கு இடையில் நேற்று தொலைபேசி உரையாடல் ஒன்று நிகழ்ந்தது.

ஜனாதிபதி அநுர, தற்போது தனது தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிப்பதில்லை என மனோ கணேசன், நேற்று முன்தினம் நடந்த

07

## இந்துக்களுக்கு பைபிள் வழங்க முயற்சித்தால் கொளுத்துவோம்

**ஆளுநர் தலையிட வேண்டும் என்று சிவசேனை எச்சரிக்கை**

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பிரட்லியின் செயற்பாடுகளை வடக்கு மாகாண ஆளுநர் வேடிக்கை பார்ப்பாராயின் பாடசாலைகளில் இந்து மாணவர்களுக்கு வழங்கும் பைபிள்களை வாங்கி கொளுத்துவோம் என இலங்கை சிவசேனை அமைப்பின் சிறீந்திரன் மற்றும் மாதவன் ஆகியோர் எச்சரிக்கை விடுத்தனர்.

07

## விவசாயிகளுக்கு கியூ.ஆர். இல்லை

கொழும்பு, மார்ச் 17

எரிபொருள் அனுமதிப் பத்திரம் கியூ.ஆர் குறியீடு இன்றி விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதன்படி அறுவடைப் பணிகளுக்காக ஏக்கர் ஒன்றுக்கு 15 லீற்றர் எரிபொருளும், நிலம் உழுது தயார்படுத்தல் பணிகளுக்காக ஏக்கருக்கு 20 லீற்றர் எரிபொருளும் விவசாயிகளுக்கு கியூ.ஆர். குறியீடு இன்றி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் சீனர்களுக்கு எதிரானவர்கள் அல்லர்!

## வடக்கு, கிழக்கு முதலீடுகள் தொடர்பில் சீன தூதுவர் விளக்கம்



கொழும்பு, மார்ச் 16

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலீடுகளை மேற்கொள்ளவும், சீன சுற்றுலாப் பயணிகளை அங்கு ஈர்க்கவும் சீனா மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்- தமிழ் மக்கள் சீனர்களுக்கு எதிரானவர்கள் என்ற ஒரு பிம்பம் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளது. நான் பலமுறை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்றுள்ளேன். அங்கு வாழும் மக்கள் மிகவும் அன்பானவர்கள் மற்றும் விருந்தோம்பல் பண்பு மிக்கவர்கள் என்பதை நேரில் கண்டேன்.

இவ்வாறான வரலாற்று ரீதியான அச்சங்கள் மற்றும் தவறான அபிப்பிராயங்கள் மாற்றப்பட வேண்டும். மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டால் பல விடயங்களை எளிதாகச் சாதிக்க முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காகச் சீனா 1,200 மில்லியன் ரூபாவை (120 கோடி) ஒதுக்கியுள்ளது.

இதன் மூலம் வீட்டுத்திட்டங்கள், மீன்பிடி வலைகள் வழங்கல் மற்றும் உலர் உணவுப் பொதிகள் விநியோகம் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் இப்பகுதிகளில் விசேட உணவு விநியோகத் திட்டங்களைச் செயற்படுத்தவும் திட்டமிட்டுள்ளேன்.

இந்தியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து ஒரு "முத்தரப்பு ஒத்துழைப்புத் தளத்தை" உருவாக்க வேண்டும்.

அண்மைக்காலமாக இந்தியா, சீன முதலீடுகள் தொடர் பான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வருவது பிராந்திய வளர்ச்சிக்குச் சாதகமான விடய மாகும்.

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு 7.2 பில்லியன் டொலர்களை எட்டியிருப்பது பாராட்டுக்குரியது. எனினும், வெறும் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்காமல், கைத்தொழில் துறையைப் பலப்படுத்தினால் மட்டுமே நிலையான வருமானத்தை உருவாக்க முடியும்.

முதலீட்டாளர்களை ஈர்க்க "ஒற்றைச் சாளர முறைமை"யை இலங்கை வினைத்திறனாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கையில் சீனா முன்னெடுக்கும் பல பணிகள் ஊடகங்களில் போதியளவு வெளிவருவதில்லை. 14 புதிய பாலங்களை நிர்மாணித்தல், 100 மின்சாரப் பேருந்துகளை நன்கொடையாக வழங்குதல் மற்றும் கடந்த நான்கு வருடங்களாக 15 மில்லியன் டொலர் பெறுமதியான பாடசாலை சீருடைத் துணிகளை வழங்குதல் போன்றவற்றைச் சீனா செய்து வருகிறது. அத்துடன், இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கான விசேட மருத்துவ வாகனத்தையும் சீனா வழங்கியுள்ளது-என்றார். (அ)

# இரா. நல்லகண்ணுவுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி



யாழ்ப்பாணம், மார்ச் 17

அண்மையில் தமிழகத்தில் இயற்கையெய்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் இரா. நல்லகண்ணுவுக்கு யாழ்ப்பாணத்தில் மிகவும் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

அரசியலிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தனது இறுதி மூச்சுவரை தூய்மை, எளிமை, நேர்மை, பொதுவுடைமையைக் கடைப்பிடித்து வந்த இரா. நல்லகண்ணு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்துள்ளார். அவரின் தன்னலமற்ற தியாக வாழ்வை நன்றியுடன் நினைவிற் கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்நினைவு கூர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

யாழ்ப்பாணம்- நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இந்நினைவுகூர் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நினைவுரைகளைத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் செல்திசையுடன் தொடர்புபடுத்தி ஆற்றியிருந்தார்கள்.

பசுமை இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர் சோ.சிவநேசனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்ச்சியில் பொது மக்கள் கலந்துகொண்டு இரா. நல்லகண்ணுவின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தியிருந்தார்கள். (அ)

# வாகன இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணி குறித்து அவதானம்

## அரசிடம் வலியுறுத்துகிறார் அலி சப்ரி

கொழும்பு, மார்ச் 17

வாகன இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணி குறித்து அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என முன்னாள் வெளிவிவகார மற்றும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தற்காலிகக் கட்டுப்பாடுகளை விதிப்பது அவசியமாகலாம் என்றும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வாகன இறக்குமதியால் அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்படும் தாக்கத்தை திறைசேரி மிக நெருக்கமாகக் கண்காணிக்கவேண்டும். மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டாலும்கூட இறக்கு மதியைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

ஒருவேளை இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து வெளிப்படையான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாக, ஏற்கனவே கடன் கடிதங்கள் திறக்கப்பட்ட அல்லது கப்பலில் ஏற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பில் இறக்குமதியாளர்கள் பாதிக்கப்படாதவாறு விதிகள் அமைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கோழி இறைச்சி விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 17

கோழி இறைச்சியின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

கோழி வியாபாரிகள் சங்கத் தலைவர், எம்.ஐ.எம். இக்பால் இது தொடர்பில் கூறுகையில், சந்தையில் நேற்று கோழி இறைச்சி ஒரு கிலோ ரூபா 1,400 ஆக உயர்ந்துள்ளதாக குறிப் பிட்டார்.

சந்தையில் ஏற்பட்ட சமீபத்திய ஏற்ற, இறக்கங்களைத் தொடர்ந்து இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இது சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதிக்கிறது என அவர் கூறினார்.

# கியூ.ஆர். மோசடி செய்தால் சட்ட நடவடிக்கை நிச்சயம்!

கொழும்பு, மார்ச் 17

நாடு முழுவதும் கியூ.ஆர் குறியீடு முறையிலான எரிபொருள் விநியோக முறையை பொதுமக்கள் பயன்படுத்தும் போது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறு அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ். யூ வூட்லர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கியூ.ஆர் குறியீடு முறையைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள், அதில் மோசடி செய்பவர்கள் அல்லது அதன் நடைமுறைப்படுத்தலுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக பொலிஸார் கடும் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள்.

எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும்போது பொதுமக்கள் பொறுமையுடனும், பொலிஸாருக்கு ஒத்துழைப்புடனும் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்-என்றார். (அ)

# புத்தூரில் செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

புத்தூர் மடிகே பஞ்சசீக வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கவிதா லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகனும் சிறப்பு விருந்தினராக யாழ். நாகவிகாரைப் பிரதம குரு வண. மீஹ ஜந்துரே சிறீ விமலதேரோவும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நளாயினி சத்தியசங்கர் மற்றும் யாழ். மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் உஷா நந்தினி பிரதீசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# 1 இலட்சம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான எரிபொருள் கடந்த 10 நாள்களில் விநியோகம்!

கொழும்பு, மார்ச் 17

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலைத் தொடர்ந்து, இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் கேள்வியை நிவர்த்தி செய்ய கடந்த 10 நாட்களில் ஒரு இலட்சம் மெற்றிக் தொன்னுக்கும் அதிக எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த 10 நாட்களில் 57,000 மெற்றிக் தொன் டீசலும், 47,000 மெற்றிக் தொன் பெற்றோலும் நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக ஒன்றரை மாத காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய இந்த அளவிலான எரிபொருள், தற்போதைய திடீர் கேள்வி காரணமாக ஒன்பது நாட்களுக்குள்ளேயே விநியோகிக்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் நாட்டுக்கு வருகை தந்த இரண்டு எரிபொருள் கப்பல்களிலிருந்தே இந்த இருப்புக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கையிருப்புகள் மற்றும் விற்பனை குறித்த சரிபார்ப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கியூ.ஆர் குறியீட்டு முறையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட எரிபொருளின் அளவும், விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் அளவும் [illegible] பார்க்கப்படவுள்ளன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.03.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மனநிலை குழம்பியவர் ஜனாதிபதியாக வந்தால்...?

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஜனாதிபதியிடம் குவிக்கப்படும் அளவு கடந்த அதிகாரங்கள் குறித்து எச்சரிக்கை செய்த காலஞ்சென்ற முதுபெரும் இடதுசாரித் தலைவர் கலாநிதி என்.எம். பெரேரா மனநிலை குழம்பிய ஒருவர் ஜனாதிபதியாக வந்தால் என்னவாகும் என்று கேள்வியெழுப்பினார்.

இலங்கையில் அவ்வாறு மனநிலை குழம்பிய ஜனாதிபதி எவரும் பதவிக்கு வந்ததாக இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்றபோதிலும், தற்போது அமெரிக்க டொனால்ட் ட்ரம்பின் சொல்லையும் செயலையும் பார்க்கும்போது என்.எம். பெரேராவின் அந்த கேள்வி நினைவுக்கு வருகிறது.

ட்ரம்ப் தனது முதலாவது பதவிக்காலத்தில் (2016 - 2020) உள்நாட்டு மற்றும் சர்வதேச விவகாரங்களை எவ்வாறு ஏறுமாறாகக் கையாண்டார் என்ற அனுவங்களுக்கு பின்னரும் கூட, இரண்டாவது தடவையாகவும் அமெரிக்கர்கள் வெள்ளை மாளிகைக்கு அனுப்பியதை புரிந்து கொள்ளவே முடியவில்லை. இப்போதாவது தாங்கள் செய்த தவறை அமெரிக்கர்கள் உணர்ந்து கொள்கிறார்களோ தெரியவில்லை.

தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் வருடத்தில் (2025) உலகில் எட்டுப் போர்களை தடுத்து நிறுத்தியதற்காக தனக்கு நோபல் சமாதானப் பரிசு தரப்படவேண்டும் என்று வலிந்து கேட்ட ட்ரம்ப் அந்த பரிசைப் பெற்ற வெனிசூலாவின் எதிர்க்கட்சி அரசியல்வாதி மச்சாடோ தனது பதக்கத்தைக் கொடுத்தபோது அதை அணிந்து மகிழ்ந்ததைக் கண்டோம்.

நோபல் பரிசுக் கமிட்டி தனக்கு சமாதானப் பரிசைத் தராவிட்டாலும் அதை எவ்வாறு தனதாக்கிக் கொள்வது என்று நோர்வேஜியர்களுக்கு காண்பிக்கவேண்டும் என்பதற்காகத்தான் ட்ரம்ப் அவ்வாறு செய்தார் போலும்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக தான் தொடுத்திருக்கும் போர் மூன்றாவது வாரத்திற்குள் பிரவேசித்திருக்கும் நிலையில், எதிர்பார்த்ததைப் போன்று விரைவான வெற்றியைப் பெறமுடியவில்லை என்ற குழப்பத்தில் ட்ரம்ப் கடந்த சில நாட்களாக தெரிவித்துவரும் கருத்துக்கள் அவரின் மனநிலை பற்றி கடுமையான சந்தேகங்களைக் கிளப்புகின்றன.

ஈரானுக்கு எதிரான போர் உலகைப் பாதுகாப்பானதாக்குவதற்காக தான் மேற்கொள்ளும் ஒரு "சிறிய மகிழ்ச்சிச் சுற்றுலா" (Minor excursion) என்று தொடக்கத்தில் கூறிய ட்ரம்ப் ஈரானின் கார்க் தீவு மீது மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் குறித்து அறிவித்தபோது ஒரு கேளிக்கைக்காக (Fun) அவ்வாறு செய்ய விருப்பதாக கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இடையில் சில நாட்களுக்கு முன்னர் விரைவில் போர் முடியப் போகிறது என்றும் பிறகு அமெரிக்கா வெற்றி பெற்றுவிட்டது என்றும். கூறிய அவர், "போதுமானளவு வெற்றியை" இன்னமும் பெறவில்லை என்று குறிப்பிட்டார்.

போருக்கான தங்களது நேர அட்டவணைக்கு வெகு முன்னதாகவே ஈரானை வலுவிழக்கச் செய்துவிட்டதாகவும் ஈரானில் இலக்கு வைப்பதற்கு தங்களுக்கு இனிமேல் எதுவுமில்லை என்றும் ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூறிய அமெரிக்க ஜனாதிபதி, ஈரான் மூடிவைத்திருக்கும் ஹோர்முஸ் நீரிணையை விடுவிப்பதற்கு படைகளை அனுப்புமாறு மேற்குலக நாடுகளை மாத்திரமல்ல, சீனா, ரஷ்யாவையும் கெஞ்சுகிறார்.

போர் எப்போது முடிவுக்கு வரும் என்று செய்தியாளர்கள் மார்ச் 13 ஆம் திகதி கேட்டபோது "நான் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று உணரும் போதுதான் அது முடிவுக்கு வரும்" என்று கூறினார். போர்களை "அழகான போர்கள்" (Beautiful wars) என்று அழைக்கும் முதன் முதலான அமெரிக்க ஜனாதிபதியாக மாத்திரமல்ல, உலக நாடொன்றின் முதல் தலைவராகவும் ட்ரம்ப் விளங்கும் விசித்திரத்தைக் காண்கிறோம்.

# பாடசாலை செயல்பாடுகளை நிறுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 17

கியூ. ஆர். குறியீட்டு முறை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்டுள்ள எரிபொருள் வரிசைகள் காரணமாக, பாடசாலை நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது தொலைதூர கற்றல் முறைகளை அறிமுகப்படுத்தவோ இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சின் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கையில், பாடசாலைகளை மூடுவது தொடர்பில் இதுவரை எந்த வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று தொடரும்.

எவ்வாறாயினும், நாட்டில் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதில் எழுந்துள்ள சவால்கள் குறித்து ஆராயும் பொருட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ உள்ளிட்ட பல அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர்ச் சூழல், எரிபொருள் விநியோகம் மற்றும் ஏனைய அத்தியாவசிய துறைகளில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. இக்கட்டான சூழ்நிலையிலும் பொதுச் சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதை உறுதி செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

(எ)

# டுபாய், குவைத், சவூதி மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

தெஹ்ரான், மார்ச். 17

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய், குவைத், சவூதி அரேபியா, பஹ்ரைன், கட்டாரை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் இராணுவத்துக்கு இடையே 17 ஆவது நாளாக போர் நீடித்தது. ஈரானின் பார்சு மாகாண தலைநகர் சிராசுவில் அந்த நாட்டின் இராணுவ தளம் உள்ளது. அங்கு ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. இதைத் தொடர்ந்து சிராசுவில் உள்ள இராணுவ முகாம்களை குறிவைத்து அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இதில் ஈரான் இராணுவத் தளங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதேபோல ஈரானின் இஸ்பகானில் உள்ள இராணுவ முகாம்களை குறிவைத்தும் அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் வான் வழி தாக்குதலை நடத்தின. ஈரான் முழுவதும் இதுவரை 1400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடியாக மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது

ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபி, டுபாய் பகுதிகளில் அமெரிக்க விமானப் படைத் தளங்கள் செயல்படுகின்றன. இந்த தளங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணைகளை வீசியது. மேலும் டுபாய் மெரினா கடற்கரை, அல் சூபவ் பகுதிகளில் ஈரான் ஏவுகணைகள் விழுந்து வெடித்துச் சிதறின.

ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜாயிரா துறைமுகத்தின் மீது ஈரான் இராணுவம் நேற்று முன்தினம் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலால் துறைமுகத்தை அண்மித்துள்ள எண்ணெய் கிடங்குகள் தீப்பிடித்து எரிகின்றன. அங்கு 2 ஆவது நாளாக எண்ணெய் கிடங்குகள் கொழுந்துவிட்டு எரிந்தன. தீயை அணைக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குவைத்தில் அமெரிக்க விமானப் படைத் தளம் செயல்படுகிறது. அந்த படைத்தளத்தை குறிவைத்து ஈரான் இராணுவம் 2 ஏவுகணைகளை வீசியது. மேலும் குவைத் சர்வதேச விமான நிலையத்தின் மீது ஈரான் இராணுவம் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் விமான நிலையத்தின் ரேடார் கட்டமைப்பு சேதமடைந்தது. சவூதி அரேபியாவின் அல் கார்ஜ் நகரில் அமெரிக்க விமானப் படைத்தளம் செயல்படுகிறது. அந்த தளத்தை குறிவைத்து ஈரான் இராணுவம் நேற்று 6 ஏவுகணைகளை வீசியது. மேலும் 2 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்த முயற்சி செய்தது. ஈரானின் ஏவுகணைகள், ட்ரோன்கள் நடுவானில் அழிக்கப்பட்டன.

கட்டார் தலைநகர் டோஹாவில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளம், பஹ்ரைன் நாட்டின் ஷேக் இசாவில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளம், அந்த நாட்டின் மனாமாவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணைகளை வீசியது. அவை நடுவானில் அழிக்கப்பட்டன. இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை குறிவைத்தும் ஈரான் இராணுவம் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும்.உற வினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நன்றி மறந்தவர்களை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. லேசாக தலை வலிக்கும்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். புதுபொருள் வந்து சேரும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

# நிதி மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் மன்னாரை சேர்ந்த பெண் கைது!

மன்னார், மார்ச். 17

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் மன்னாரை சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்திய நபர் ஒருவர், அதன் மூலம் ஈட்டிய பணத்தில் இரண்டு வீடுகள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் சுமார் 360 பவுண் தங்க ஆபரணங்களைச் சேர்த்துள்ளதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படை யில் சட்டவிரோத சொத்துக் கள் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக, பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது 02 வீடுகள் மற்றும் மோட்டார் சைக்கிள் தொடர்பில் மன்னார் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, குறித்த சொத்துக்களை முடக்கும் உத்தரவு பெறப்பட்டு தற்போது அமுலில் உள்ளது.

தங்க ஆபரணங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையில், பிரதான சந்தேகநபரின் மனைவியின் தாயார் பல நிதி நிறுவனங்களில் இந்தத் தங்க நகைகளை அடகு வைத்துள்ளதோடு, பின்னர் மன்னார் பகுதியிலுள்ள பல நகைக்கடைகளில் அவற்றை விற்பனை செய்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த தங்க ஆபரணங்கள் சட்டவிரோதச் செயல்கள் மூலம் ஈட்டப்பட்டவை என்பதைத் தெரிந்தே அடகு வைத்தமை மற்றும் விற்பனை செய்தமை மூலம் நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில், சந்தேகநபரின் மனைவியின் தாயார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மன்னார் பகுதியை சேர்ந்த 66 வயதுடைய பெண் என தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# எரிபொருள் விநியோகம் குறித்து யாழில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச். 17

யாழ். மாவட்ட எரிபொருள் விநியோக நிலைமைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்று முன்தினம் இரவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் எரிபொருள் தொடர்பில் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்கி, அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்வது குறித்து ஆராயும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டிஜிற்றல் குறியீட்டு முறையை (கியூ. ஆர். குறியீடு ) தீவகப்பகுதி மக்கள் பயன்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்னைகள், நீண்ட தூரங்களுக்கு பயணிக்கும் பாரவூர்திகளுக்கான எரிபொருள் விநியோக பொறிமுறைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் சுகாதாரம், கல்வி, கைத்தொழில், விவசாயம், கடற்றொழில் போன்ற துறைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டன. அந்தந்தத் துறைகளில் தற்போதைய எரிபொருள் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன்,

மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன், யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாறப்பன, பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். சிவகரன், பிரதேச செயலாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-03)

## மாரடைப்பு எனும் நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், மார்ச். 17

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய மாரடைப்பு எனும் நூல் வெளியீடு பருத்தித்துறை சூரிய மஹால் விருந்தினர் விடுதியில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை பொது வைத்திய நிபுணர் க. சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் சி. சிவன்சுதன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நூலின் முதல் பிரதியை மருத்துவர் சி. சிவன்சுதன் வெளியீடு செய்து வைக்க பௌதிகவியல் ஆசிரியர் எஸ். குமரன் பெற்றுக்கொண்டார்.

## "வடக்கில் துரித கதியில் வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை"

யாழ்ப்பாணம், மார்ச். 17

வடமாகாணத்திலுள்ள வீதிகள் அனைத்தையும் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் புனரமைக்க எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வளமான நாடு - அழகான வாழ்க்கை என்ற தொனிப்பொருளின் கீழ், மறுமலர்ச்சிக்கான பாதையாக யாழ். மாவட்டத்தில் 117.04 மில்லியன் ரூபாய் செலவில் காரைநகர் சுற்றுவட்ட வீதியின் புனரமைப்புப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)

## சிறுப்பிட்டியில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 17

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்விய லில் திருவிளையாடல் புரா ணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 49 எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோ திமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் சி. கா. கமலநாதன் நிகழ்த்தும் "நரி பரியாக்கிய படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெற வுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள் ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவேந்திரமுனை கடற்பரப்பில் படகில்

# 300 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றல்!

கொழும்பு, மார்ச். 17

தெற்கு கடற்பரப்பில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் பலநாள் மீன்பிடி படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

தேவேந்திரமுனை கடற்பரப்புக்கு தெற்கே ஆழ்கடல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் வழிமறிக்கப்பட்ட குறித்த படகு, நேற்று திங்கட்கிழமை காலை திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது.



பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, 06 மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த 123 கிலோ கிராம் ஹெரோயின் கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் சர்வதேச சந்தை மதிப்பு சுமார் 300 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள், அழகுசாதன பொருட்களுடன் இருவர் கைது!

கொழும்பு, மார்ச். 17

சுமார் ஒரு கோடியே 68 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான குஷ் ரக போதைப் பொருள், நிறத்தை மெருகூட்டும் கொலாஜன் மற்றும் விற்றமின் சி மாத்திரைகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை, கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இவற்றை கடத்த முயன்ற போதே, சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொரளை மற்றும் மருதானை ஆகிய பகுதியைச் சேர்ந்த 27 மற்றும் 30 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை 12. 20 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களிடமிருந்து, ஒரு கிலோ 632 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 2,160 கொலாஜன் பொட்டலங்கள், 6,390 விற்றமின் சி மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இவ்வாறான கொலாஜன் மற்றும் விற்றமின் சி மாத்திரைகளை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் முறையான அனுமதி அவசியமாகும்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# மின்சாரக் கம்பியில் சிக்கி முதியவர் ஒருவர் மரணம்!

களுத்துறை, மார்ச். 17

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரணை கந்தன அமுனு எலபீல்ல பகுதியில் வயல் நிலமொன்றில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் ஹொரணை, கந்தன பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய முதியவர் ஒருவரே உயிரிழந்தார்.

அத்துமீறி நுழைவதை தடுப்பதற்காகவோ அல்லது விலங்குகளை வேட்டையாடுவதற்காகவோ சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்குண்டு உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 17

கொட்டதெனியாவ பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொட்டதெனியாவ, ஹப்புவலான பகுதியில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, 225 கிராம் ஹெரோயின் மற் றும் 165 கிராம் ஐஸ் போதைப் பொருள் ஆகியவற்றுடன் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட் டார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அஹூங்கல்ல - கம்கரண வத்த பகுதியிலும் 261 கிராம் 620 மில் லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 22 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் சகோதரர் விபத்தில் உயிரிழப்பு

அநுராதபுரம், மார்ச். 17

பாதெனிய - அநுராதபுரம் பிரதான வீதியின் மஹகல்கடவல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் சகோதரர் உயிரிழந்தார் என்று கல்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மஹாஇலுப்பள்ளம பகுதியைச் சேர்ந்த எம். பியசேன திஸநாயக்க என்பவரே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

மஹகல்கடவல பகுதியில் வசிக்கும் தனது இளைய சகோதரரின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு விசேட நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு, மீண்டும் மோட்டார் சைக்கிளில் தனது இல்லத்துக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

மஹகல்கடவல வளைவு பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே அவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# அந்தரங்க வீடியோவை பகிர்ந்த இளைஞர்கள் இருவர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச். 17

பெண்ணின் அந்தரங்க வீடியோவை வட்ஸ்அப் ஊடாக பகிர்ந்தமை மற்றும் அதனை தம்வசம் வைத்திருந்தமை தொடர்பில் இரண்டு மாணவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அம்பலாங்கொடை, திலகபுர பகுதியில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சைபர் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்களால் சைபர் குற்ற புலனாய்வு பிரிவில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு இணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் 21 வயதுடைய அம்பலாங்கொடை, திலகபுர பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் தனியார் பல்கலைக்கழகமொன்றில் மென்பொருள் பொறியியல் பீடத்தில் பயின்று வருபவர் என்பதுடன் மற்றையவர் ஒரு கொடவத்தையிலுள்ள தொழில்நுட்ப கல்லூரியொன்றில் மோட்டார் வாகன பொறியியல் பாடநெறியை பயின்று வருபவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT TATA sky dishtv VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு
0707 888 999 நிபந்தனைக்கு உட்பட்டது.
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
| தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக ரயில் பாதைகளை புனரமைக்கும் பணி தீவிரம்

ஹற்றன், மார்ச். 17

மலையக ரயில் மார்க்கத்தில் கண்டி முதல் பதுளை வரையிலான தண்டவாளங்களைப் புனரமைக்கும் பணிகள் ஊழியர்களால் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மலையக ரயில் மார்க்கத்தின் பல இடங்களில் மண்சரிவு மற்றும் தண்டவாளங்கள் தாழிறக்கம் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் கடந்த சில மாதங்களாக இப்பகுதியிலான ரயில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்தப் பணிகளின் போது பின்வரும் பகுதிகள் முக்கிய கவனம் பெற்றுள்ளன.

கண்டியின் நுழைவாயில் பகுதியில் உள்ள "யக்கா" இரும்புப் பாலம் முதல் உலப்பனை வரையிலான தண்டவாளத் தாழிறக்கங்கள் சீர்செய்யப்படுகின்றன.

இப்பகுதிகளில் சரிந்து விழுந்த மண் திட்டுகள் அகற்றப்பட்டு வீதிகள் சுத்திகரிக்கப்படுகின்றன.

ஹற்றன் முதல் கொட்டகலை, தலவாக்கலை, வட்டகொட, கிரேட் வெஸ்டர்ன், உடரதல்ல, நானுஓயா மற்றும் பெரகும்புர வரையிலான பகுதிகளில் சேதமடைந்த பாதைகள் வெகுவாக செப்பனிடப்பட்டுள்ளன.

புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே மலையக மார்க்கத்துக்கான ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று நாவலப்பிட்டி ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

# மரை இறைச்சியுடன் கைதான இருவருக்கும் விளக்கமறியல்

நுவரெலியா, மார்ச். 17

நோட்டன் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரை ஒன்றை வேட்டையாடி அதன் இறைச்சியை கைவசம் வைத்திருந்த இருவரை வனத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து கைது செய்தனர்.

நோட்டன், ஒஸ்போன் தோட்டத்தின் 50 ஏக்கர் பிரிவுக்குட்பட்ட வனப்பகுதியில் இந்த வேட்டை இடம்பெற்றுள்ளது. ஹற்றன் வனத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நல்லதண்ணி வனஜீவராசிகள் அதிகாரிகள் மற்றும் நோட்டன் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே இவர்கள் சிக்கினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 52 வயதுடைய அதே பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்களிடமிருந்து

54 கிலோ கிராம் மரை இறைச்சி, மரையின் தலை, மரையின் தோல் (மொத்தமாக 79.5 கிலோ கிராம் இறைச்சி மற்றும் உடற்பாகங்கள்) என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவர்களை நாளை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், கைப்பற்றப்பட்ட இறைச்சியை பாவனைக்கு உதவாத வகையில் மண்ணெண்ணெய் ஊற்றி புதைக்குமாறும் நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது. (எ)

# முதலைக்குடாவில் முப்பெரும் விழா



மட்டக்களப்பு, மார்ச். 17

மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா அதிபர் ஆ. கிருபாகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அங்கு நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு இருநாள் பயிற்சிகளை முடித்துக்கொண்ட மாணவர் தலைவர்களுக்கு மேலங்கி அணிவித்து சின்னம் சூட்டும் நிகழ்வும் விளையாட்டில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கு விளையாட்டு சீருடை வழங்கும் நிகழ்வும் மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

செய்யப்பட்ட மாணவன் தட்சணாமூர்த்தி நதுஜனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றன.

முப்பெரும் விழாவில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மேற்கு வலய கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தேவரஜனி உதயகரன் கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ-09)

# "சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக எங்களுக்கு உரிய தீர்வை தாருங்கள்"

திருகோணமலை, மார்ச். 17

சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக எங்களுக்கு உரிய தீர்வைத் தாருங்கள். புதிய பயங்கரவாத தடைச்சட்டமும் தேவையில்லை. பழைய சட்டமும் தேவையில்லை என்று திருகோணமலையில் வலிந்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி நாகேந்திரன் ஆசா தெரிவித்தார்.

புதிய சங்க நிர்வாக தெரிவு நேற்று முன்தினம் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "எங்களுக்கு ஆணைக்குழுக்கள் மீது நம்பிக்கை இல்லை.

எத்தனை பதிவுகளை பெற்று எங்களை ஏமாற்றியுள்ளனர். மகளிர் தினத்தை முன்னிட்டு நாங்கள் ஆடி பாடி கொண்டாட வில்லை. இந்த அரசாங்கம் எங்களை ஏமாற்றியுள்ளது. யுத்த காலத்தில் இருந்து எங்கள் உறவுகளை இழந்து தவிக்கின்றோம். பயங்கரவாத சட்டமோ, அதில் இருந்து அரசை பாதுகாக்கின்ற எந்தவொரு சட்டமும் தேவையில்லை என்பதை அரசாங்கத்துக்கு இந்த சந்தர்ப்பத்தில் எடுத்து கூறுகின்றோம். எனவே, சர்வதேச நீதிப் பொறி முறை ஊடாக தீர்வை பெற்றுத்தாருங்கள்"- என்றார். (எ)

## கிழக்கு மாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச். 17

மத்திய, சப்ரகமுவ, வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சிறிதளவு மழை பெய்யக்கூடும். மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் வவுனியா, மன்னார், அநுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள் சந்தேகத்தில் மற்றுமொரு படகு கண்டுபிடிப்பு

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச். 17

பேருவளை பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றுமொரு பலநாள் மீன்பிடி படகையும் கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

தேவேந்திரமுனைக்கு தெற்கே ஆழ்கடல் பகுதியில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட பலநாள் மீன்படி படகு நேற்று அதிகாலை திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், அது தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் போதே, பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வந்த மற்றுமொரு மீன்பிடி படகை கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

அதில் உள்ள போதைப் பொருளின் அளவை இப்போதே சரியாகக் கூற முடியாது. படகை கரைக்கு கொண்டு வந்த பின்னரே அது குறித்துத் தெரிவிக்க முடியும்.

இதற்கு முன்னரும் கடந்த வாரத்தில் தெற்கு கடற்பரப்பில் போதைப்பொருள் கடத்திய 3 மீன்பிடி படகுகளை கடற்படையினர் கண்டுபிடித்தனர்.

இதன்படி, இந்த ஆண்டில் மட்டும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 7 பலநாள் மீன்பிடி படகுகளை கடற்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்- என்றார். (எ)

# திருகோணமலையில் விபத்து: இளைஞன் பலி! இருவர் காயம்

திருகோணமலை, மார்ச். 17

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பூறல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் மூதூர் தள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் தோப்பூர் - 06 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞன் என அடையாளம் காணப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் தோப்பூர் பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

# நாட்டில் சுகாதார சேவைகளை தடையின்றி முன்னெடுக்க நிலையான வேலைத்திட்டம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17

உலகளாவிய புவிசார் அரசியல் சூழலால் ஏற்படக்கூடிய எரிபொருள் மற்றும் எரிசக்தி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, நாட்டின் சுகாதார சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல நிலையான வேலைத்திட்டம் ஒன்று அவசியமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச-

தற்போதைய சூழலில் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய துறைகளை அடையாளம் கண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்குவது மிக முக்கியமானது எனத் தெரிவித்துள்ளார்.

நடைமுறைக்கு வந்துள்ள கியூ. ஆர். குறியீட்டு முறையிலான எரிபொருள் ஒதுக்கீடு, வைத்தியர்கள் தமது கடமைகளுக்குச் சமூகமளிக்க எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் ஏனைய சில உயர்மட்டப் பிரிவினரைப் போலன்றி, வைத்தியர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களோ அல்லது எரிபொருள் கொடுப்பனவுகளோ வழங்கப்படுவதில்லை.

எனவே, வைத்தியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதார ஊழியர்களினதும் எரிபொருள் ஒதுக்கீட்டை நியாயமான மட்டத்திற்கு உடனடியாக அதிகரிக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வீட்டிலிருந்து வேலை'...

கடமைகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய சூழலில் அரச நிறுவனங்களின் நாளாந்த செயல்பாடுகளை எவ்வாறு வினைத்திறனாக முன்னெடுப்பது என்பது குறித்துத் துறைசார் அதிகாரிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டவுடன், அது குறித்துப் பொதுமக்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் முறையாக அறிவிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## நாளை முதல் அரச...

சேவைகளுக்கு விசேட விடுமுறை நாள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும், எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் அரசாங்க நிகழ்வுகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கொழும்புத்துறையில் விபத்து;...

பயணித்த போது, பவுசருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வைத்தியர்களுக்கு இனி...

எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"கியூ.ஆர். குறியீட்டை அறிமுகப்படுத்தும் போது, பதிவிறக்கம் செய்வதில் சிக்கல்கள் மற்றும் சில தொழில்நுட்பப் பிரச்னைகள் ஏற்படுகின்றன.

இன்னும் ஒரு சில நாள்களுக்கு இந்த சிக்கல்கள் இருக்கும், பின்னர் அவை தீர்க்கப்படும்.

நாம் இதனை ஒரு பொதுவான சுற்றறிக்கையாகவே அறிமுகப்படுத்தியுள்ளோம். விசேடமான தொழில் பிரிவுகள் மற்றும் விசேட அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடும் வாகனங்கள் உள்ளன.

அவை தொடர்பான தனித்தனியான வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் அடுத்த இரண்டு அல்லது மூன்று நாள்களில் வெளியிடப்படும்.

வைத்தியர்கள் என்பவர் ஒரு விசேட தொழிலைச் சேர்ந்தவர்கள். அத்துடன் விசேட அபிவிருத்தி திட்டங்களும் உள்ளன. எனவே, ஒரு நபருக்கோ அல்லது ஒரு வாகனத்திற்கோ வழங்கப்படும் எரிபொருள் அளவு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

அவற்றின் விசேட தன்மையை இனங்கண்டு, அதற்கான சுற்றறிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் போது, வைத்தியர்களின் தேவைகளை உணர்ந்து அதற்குரிய சுற்றறிக்கைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும்."- என்றார் அமைச்சர். (அ)

## பஸ்களுக்கு டீசல்...

இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய முறைமை முழுமையாக அமுல்படுத்தப்படும் வரை, தனியார் பேருந்துகளுக்குத் தேவையான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சாலைகள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்துச் சேவைகள் தடையின்றி இடம்பெறுவதை உறுதி செய்யவும், பேருந்துகளின் தூரத்திற்கேற்ப எரிபொருளை நீதியாகப் பகிர்ந்தளிக்கவும் இந்த புதிய முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைத்துநி பொதுப் போக்குவரத்தை சீராகப் பேண இந்த எரிபொருள் ஒதுக்கீடு முறை பெரிதும் உதவியாக இருக்கும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி-மனோ கணேசன்...

நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது பகிரங்கமாக கூறி இருந்தார்.

இதையடுத்தே நேற்று இந்த உரையாடல் நிகழ்ந்துள்ளது.

இந்த தொலைபேசி உரையாடலின்போது, தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அவசர பிரச்னைகள் குறித்து உரையாடுவதற்காக மனோ கணேசன் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார, அடுத்த வாரம் தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவை, சந்தித்து உரையாட அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# "எரிபொருள் மீதான வரி குறைக்கப்பட வேண்டும்"

கொழும்பு, மார்ச். 17

எரிபொருள் மீதான வரிகளைக் குறைத்து, எரிபொருள் விலையை இயலுமானவரை நிலையான மட்டத்தில் பேண வேண்டும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"தற்போது ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளது. அத்துடன் ஏமனுக்கும் ஆபிரிக்க கண்டத்துக்கும் இடைப்பட்ட மற்றுமொரு நீரிணையை ஈரான் மூட நடவடிக்கை எடுத்தால், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படும்.

இவ்வாறான நெருக்கடி நேரங்களில் எரிபொருள் விநியோகத்தர்களுடன் முறையான தொடர்பை பேணுவதும், கையிருப்புகளை சரியாக நிர்வகிப்பதும் சிக்கல்களைக் குறைக்க உதவும்.

இலங்கை 100 சதவீதம் எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடாகும்.

ஏற்கனவே அனைத்து வகை எரிபொருட்களின் விலையும் 25 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், அரசாங்கம் தலையிட்டு வரிகளைக் குறைக்க வேண்டும்.

இந்த விலையேற்றத்தின் முழுச் சுமையையும் தொழிலதிபர்கள் மற்றும் நுகர்வோர் மீது சுமத்தாமல், அரசாங்கம் வரிச் சலுகை மூலம் விலையைத் தீர்மானிக்க வேண்டும்"- என்றார். (எ)

## நீதிமன்ற நடவடிக்கைக...

நெருக்கடியால் நீதிமன்றிற்கு சமுகமளிக்க முடியாத தரப்பினர் குறித்து நீதவான்கள் கரிசனை காட்ட வேண்டும்.

தொலைதூரப் பகுதிகளில் இருந்து வரும் சட்டத்தரணிகள், வழக்குதாரர்கள், சந்தேகநபர்கள், சாட்சியாளர்கள் மற்றும் எதிர்தரப்பினர் எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகளால் நீதிமன்றிற்கு வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளக்கூடும் என்பதை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு வழக்கின் தன்மையையும், சம்பந்தப்பட்ட தரப்பினரின் நடைமுறைச் சிக்கல்களையும் தனித்தனியாக ஆராய்ந்து, எரிபொருள் நெருக்கடியால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நீதவான்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள், ஏனைய நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர் நீதிமன்றத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்துக்களுக்கு பைபிள்...

நேற்று திங்கட்கிழமை யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர்களை இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரின் செயற்பாடு மதங்களுக்கு இடையில் முறுகல்களை ஏற்படுத்துவதாக அமைகிறது.

பைபிள் என்கின்ற கிறிஸ்தவ நூலினை வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு அனுமதித்தமை இந்து மாணவர்களையும் பைபிள் நூலை பெறுவதற்கு திணிப்பதாக அமைகிறது.

குறித்த நூலினை வழங்குவதற்காக அனுமதி கோரிய கிறிஸ்தவ அமைப்பு தொடர்பில் விசாரித்தபோது, அவ்வாறான அமைப்பு ஒன்று இலங்கையில் பதிவு செய்ததாக அறியப்படவில்லை.

அவ்வாறான அமைப்பை ஒன்று வடக்கு மாகாணத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் பைபிள்களை வழங்கப் போவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளது.

வடமாகாண ஆளுநரின் அனுமதி இல்லாமல் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வழங்குவதற்கு சிபாரிசு செய்தமை ஏதோ ஒரு பின்புலத்தை அடிப்படையாக கொண்டதாக பார்க்கிறோம்.

குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ள நிலையில் பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளோம்.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்து மாணவர்களுக்கு பைபிளை வழங்குவதற்கு முற்பட்டால் அதனை வாங்கி பாடசாலைகளுக்கு முன்பாக கொளுத்துவோம்-என்றனர். (அ)

# பொலிஸார் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 570 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 17

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 570 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 26,905 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 12 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 280 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 138 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 273 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 69 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,530 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஹிருணிகா உட்பட 14 பேர் மீதான வழக்கு விசாரணை ஒகஸ்ட்டில்!

கொழும்பு, மார்ச் 17

பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதாகக் கூறி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 14 பேர் மீது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி மீண்டும் விசாரிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் அங்கீகரிக்கப்படாத வீதி நாடகத்தை நடத்தி சந்தேகநபர்கள் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதாகக் கூறியே அவர்கள் மீது முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 17

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 47ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர், பொன். சந்திரவேல் "அகத்திய படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## 7 ஏக்கர் காணி விடுத்தது...

விவசாயப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் கருத்து வெளியிட்டதுடன், பொதுமக்கள் மற்றும் அரச திணைக்களங்களின் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். (அ)

## பொதுப் போக்குவரத்து...

இல்லை. பஸ்களின் பயண தூரத்திற்கு ஏற்ப எரிபொருள் தேவை மாறுபடுகிறது. குறுகிய தூர பஸ்களுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 80 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. தூரப் பயண பஸ்களுக்கு ஒரு நாளைக்குச் சுமார் 150 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. காலி - கொழும்பு இடையே பயணிக்கும் பஸ் ஒன்றிற்கு ஒரு பயணத்திற்கு 100 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. தற்போதைய ஒதுக்கீட்டின்படி, ஒருமுறை காலி சென்றால் மீண்டும் கொழும்பு திரும்புவதற்கு அடுத்த வாரம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பஸ்கள் நாளொன்றுக்கு ஓடும் கிலோமீற்றர் தூரத்தைக் கணக்கிட்டு, அதற்கேற்ப வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை கியூ.ஆர் முறை மூலம் வழங்க வேண்டும். இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்கள் மூலம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என அரசாங்கம் கூறினாலும், நடைமுறையில் எந்த டிப்போவும் முறையான விநியோகத்தை இதுவரையில் வழங்கவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் கடும் நெரிசலில் பஸ்கள் சிக்கிக்கொள்வதைத் தவிர்க்க, பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கவேண்டும். பாடசாலை வான் சேவைகள், அலுவலகப் போக்குவரத்து மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கும் முறையான எரிபொருள் விநியோகத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மத்திய கிழக்கில் பதற்றநிலையை உடனடியாகக் குறைக்கவேண்டும்!

**இலங்கை அரசு அழைப்பு**

கொழும்பு, மார்ச் 17

மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவில் அதிகரித்துவரும் பதற்ற நிலையை உடனடியாக குறைக்க வேண்டுமென இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அந்தப் பகுதியில் நிலைமை வேகமாக மோசமடைந்து வருவதால் இலங்கை ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் மோதல்கள் பொதுமக்களுக்கு நேரடி அச்சுறுத்தலாக மாறியுள்ளதுடன், ஏற்கனவே பலர் உயிரிழந்துள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை இலங்கை கடுமையாக கண்டித்துள்ளது. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்படி, அனைத்து தரப்பினரும் பொதுமக்களை பாதுகாப்பது அடிப்படை கடமையாகும் என்றும் வலியுறுத்தப்பட்டுள் ளது.

மனிதாபிமான நெருக்கடி தீவிரமடைந்து வரும் நிலையில், உலக பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தகத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, நிலைமைகளை இலங்கை அரசு கண்காணித்து வருவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இது உலகம் முழுவதும் உள்ள நாடுகளை பாதிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையின் அடிப்படைக் கொள்கைகளை மதிக்கவேண்டிய அவசியத்தையும் இலங்கை வலியுறுத்தியுள்ளது.

அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் நிலப்பரப்பு முழுமையை மதிக்கும் தனது உறுதிப்பாட்டை வலியுறுத்திய இலங்கை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு, மேலும் பதற்றம் அதிகரிக்காமல் இருக்க மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என இலங்கை கேட்டுள்ளது. (அ)

## குமார ஜயக்கொடிக்கு எதிரான பிரேரணை நாளை கையளிப்பு!

கொழும்பு, மார்ச் 17

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை பாராளுமன்றத்தில் கையளிக்கப்படவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

மார்ச் மாதத்துக்குரிய 2ஆவது வார பாராளுமன்ற கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகி, 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்நிலையிலேயே எம்.பிக்களிடம் இன்று கையொப்பம் பெறப்பட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, தரமற்ற நிலக்கரி இறக்குமதி என்பன உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. (அ)

## எரிபொருள் கியூ.ஆர். நடைமுறையை காலவரையறையின்றி நீடிக்க முடிவு!

கொழும்பு, மார்ச் 17

மத்திய கிழக்கில் ஈரான் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகளாவிய எரிபொருள் சந்தையில் ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடியைச் சமாளிக்க, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை காலவரையறையின்றி தொடர இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்க்க, வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டு முறையை தொடர்ந்து நடைமுறைப்படுத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் இதனை டிஜிற்றல் பணப்பரிமாற்ற முறையுடன் இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால், சர்வதேச கப்பல் போக்குவரத்தில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது.

அவசர காலங்களில் அரசுக்கு இடையிலான ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருளை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

அதேபோல், சீனாவிடமிருந்தும் உதவிக்கான வாக்குறுதி கிடைத்துள்ளது.

இப்பிராந்தியத்தில் தரித்து நிற்கும் ரஷ்யக் கப்பல்களிடமிருந்து எரிபொருளைப் கொள்வனவு செய்வது குறித்து வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ரஷ்யத் தூதுவருடன் பேச்சு நடத்தியுள்ளார். இது தொடர்பான உத்தியோகபூர்வ கோரிக்கை மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சர்வதேச எரிசக்தி முகமை விடுத்துள்ள எச்சரிக்கையின்படி, ஈரானியப் போரினால் ஏற்பட்டுள்ள இந்த விநியோகத் தடையானது, 1973 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளை விடவும் மோசமான ஒன்றாகக் கருதப்படுகிறது. (அ)

## 84 மாலுமிகளின் இறுதி ஊர்வலம் தெஹ்ரானில்!

தெஹ்ரான், மார்ச் 17

கடந்த மார்ச் 4 ஆம் திகதி அமெரிக்காவினால் மூழ்கடிக்கப்பட்ட "டேனா" போர்க்கப்பலில் பலியான 84 மாலுமிகளுக்கான இறுதி ஊர்வலம் இந்த வாரம் தெஹ்ரானில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இறுதி ஊர்வலம் நாளை புதன்கிழமை மத்திய தெஹ்ரானில் நடைபெறும் என்றும், அதற்கு முன்னதாக இன்று செவ்வாய்க்கிழமை மாலை தலைநகரின் முக்கிய சதுக்கங்களில் விடைபெறும் நிகழ்வுகள் நடைபெறும் என்றும் தஸ்னிம் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச கடல் பகுதியில் ஆயுதங்கள் இன்றிப் பயணித்துக் கொண்டிருந்தபோது, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட டொர்பிடோ ரக ஏவுகணைத் தாக்குதலில் இந்த போர்க்கப்பல் சிதைவடைந்தது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாலுமிகளின் உடல்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை முன்னெடுத்திருந்தது. (அ)

## சிங்கப்பூருக்கு பயணமானார் முன்னாள் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, மார்ச் 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார் என தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் அவர் இவ்வாறு சிங்கப்பூர் பயணமாகியுள்ளார்.

அவர் நாளை புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறவுள்ளார் என தெரியவருகிறது.

மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளைத் தொடர்ந்து, அவர் சுமார் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து ஓய்வு எடுப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த வாரமும் உள்நாட்டிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் மூன்று நாட்கள் தங்கியிருந்து மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈரானியப் போரிலிருந்து கௌரவமாக வெளியேற எண்ணுகிறதா அமெரிக்கா?

வொஷிங்டன், மார்ச் 17

ஈரான் மீதான போர் நீண்ட காலம் தொடருமானால், அமெ ரிக்கா மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என அல் ஜசீரா அரசியல் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஈரானின் புதிய தலைமை மற் றும் அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதார அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு "கௌரவ மான வெளியேற்ற வழி" குறித்து வொஷிங்டன் ஆலோசித்து வருவ தாக அந்தத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்த மோதல் 4 முதல் 6 வாரங் களுக்குள் முடிவுக்கு வரும் என அமெரிக்க தேசிய பொருளாதாரப் பேரவையின் பணிப்பாளர் கெவின் ஹார்ட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், போர் திட்டமிட்ட கால அட்டவணையை விட முன்னதாகவே முன்னேறி வருவதாகவும், விரைவில் எண்ணெய் விநியோகம் சீராகும் என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எனினும், இதற்கு மாறாக ஈரா னிய வெளிவிவகார அமைச்சர் அப் பாஸ் அரக்சி, ஈரான் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் போராடத் தயா ராக இருப்பதாக எச்சரித்துள்ளார்.

"அமெரிக்காவை மீண்டும் ஒரு வெளிநாட்டுப் போரில் ஈடுபடுத்த மாட்டேன்" என்ற தனது தேர்தல் வாக்குறுதியை ட்ரம்ப் மீறியுள்ள தாக அவரது ஆதரவாளர்களி டையே அதிருப்தி நிலவுகிறது.

போர் நீண்டகாலம் நீடித்தால், அது நவம்பரில் நடைபெறவுள்ள பாராளுமன்ற இடைத்தேர்தலில் குடியரசுக் கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இதன் காரணமாகவே, வெற் றியை அறிவித்துவிட்டு போரிலி ருந்து வெளியேறுவதே சிறந்தது என வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரிகள் சிலர் கருதத் தொடங் கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சஜின் வாஸ்'க்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, மார்ச்

நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில், மிஹின் லங்கா நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## உண்மையான சூத்திரதாரியின் பெயரை 31ஆம் திகதி கூறுவேன்!

**உதய கம்மன்பில அறிவிப்பு**

கொழும்பு, மார்ச் 17

அரசாங்கம் வெளிப்படுத்தாத உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் உண்மையான பிரதான சூத்திரதாரியார் என்பது குறித்து மார்ச் 31ஆம் திகதி நாட்டுக்கு வெளிப்படுத்தப் போவதாக பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும், சட்டத்தரணியுமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, சுயாதீனமான ஒருவர் மேற்கொண்ட ஆய்வின் மூலம் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் சூத்திரதாரியைத் தேடி' எனும் ஆய்வு நூலைத் தாம் தயாரித்துள்ளதாகவும், அதனை எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி மாலை 3:30 மணிக்கு வெளியிட எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கடந்த 7 வருடங்களாக விற்பனை செய்யப்பட்டது. இதை வைத்து அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன, கலைக்கப்பட்டன.

எந்தவொரு அடிப்படையும் இன்றி இராணுவத்தினரை துன்புறுத்த இந்தத் தாக்குதல் பயன்படுத்தப்பட்டது.

இப்போது இந்த மோசடிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான காலம் வந்துவிட்டது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.